**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.118/2018**

2025–ம் வருடம் அக்டோபர் திங்கள் 10–ம் நாளன்று 99 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக **பி.வா.சா.14**–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **காளீஸ்வரி** | **தொழில்** | : |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : |
| **முகவரி** | : | | **மதம்** | : |
| **ஜாதி** | : | | **வயது** | : |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 99 வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 99 வது பிரதிவாதி காளீஸ்வரி ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.77 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 19.02.2009 ஆம் தேதிய காளீஸ்வரி பெயரிலான கிரைய ஆவணம் எண்.1185/2009 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.78 (வாதி தரப்பு வழக்கறிஞர் பதிவு நகலாக இருப்பதால் ஆட்சேபனை தெரிவித்தார். பதிவு நகலை குறியீடு செய்யலாம் என்று கருதி ஆட்சபேனை நிராகரிக்கப்பட்டு ஆக குறியீடு செய்யப்படுகிறது. 99 வது பிரதிவாதி காளீஸ்வரி பெயரிலான சொத்து வரி ரசீது பி.வா.சா.ஆ.79 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சொத்தின் வில்லங்க சான்றிதழ் கணிணி நகல்

பி.வா.சா.ஆ.80 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. (வில்லங்க சான்றிதழ் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) 99 வது பிரதிவாதி காளீஸ்வரி பெயரிலான தனிபட்டா எண்.1414 கணிணி நகல் பி.வா.சா.ஆ.81 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 99 வது பிரதிவாதி காளீஸ்வரி மனை சர்வே எண்.28/1C–ன் புல வரைபடம் (FMB Sketch) கணிணி நகல் பி.வா.சா.ஆ.82 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசலை தாக்கல் செய்யாமல் புகைப்பட நகல்கள் தாக்கல் செய்ததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1 முதல் 6, 8 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 62, 64, 65, 67, 68, 69, 70 முதல் 72, 75 முதல் 87, 89 முதல் 98, 100, 102, 104 முதல் 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தும்பிவாடி கிராமத்தில் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. எனது சொந்த ஊர் கரூர் மாவட்டம் ஆத்தூர் அஞ்சல், கோதை நகர், யுனிவர்சல் கார்டன். மேற்சொன்ன என் சொந்த ஊரிலிருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 14 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். பி.வா.சா.ஆ.79 விவசாய நிலங்களுக்கு கொடுக்கக்கூடிய கிஸ்து ரசீது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.78 மனை நிலமாகத்தான் காட்டப்பட்டுள்ளது ஆகையால் பஞ்சாயத்தில் வீட்டு காலி

மனைக்கு தான் ரசீது கொடுப்பார்கள். வருவாய் துறையில் அதற்கு கிஸ்து ரசீது வழங்கமாட்டார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.80 யார் பெயரில் வில்லங்க சான்றிதழ் வழங்கினார்கள் என்று குறிப்பில்லை என்று சொன்னால் தெரியாது. பி.வா.சா.ஆ.78 கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8 ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்றும் ஆகையால் பி.வா.சா.ஆ.78 ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல நான் வில்லங்கம் மற்றும் ஆவணங்களை பார்த்துதான் கிரையம் பெற்றுள்ளேன். சொத்தை வாங்கும்போது வாங்கிய வில்லங்க சான்றிதழ் இன்றுவரை என் கைவசம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளீர்களா என்றால் தற்போது என்னிடம் இல்லை. பி.வா.சா.ஆ.78 ன் அடிப்படையில் வழக்கு சொத்துக்களை சர்வே எண்.28/2 க்கு தட பாத்தியம் உள்ளதாக கூறி பட்டா வழங்கப்பட்டுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.78 கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8–ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்றும் ஆகையால் பி.வா.சா.ஆ.78 ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி

உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 106 நபர்கள் கிரையம் பெற்றதற்காக நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.